

தலைமைச் செயலகத்தில் நேற்று (28.12.2023) நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பெருநகர சென்னை மாநகராட்சியின் மாமன்ற உறுப்பினர்கள் ஆலப்பாக்கம் கு.சண்முகம் மற்றும் திருமதி க.சரஸ்வதி ஆகியோரின் மறைவையொட்டி, குடும்ப பாதுகாப்பு நிதியாக தலா ரூபாய் 3 இலட்சத்திற்கான காசோலையினை அவர்களது குடும்பத்தினரிடம் வழங்கினார். உடன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதிச்சேவை நிறுவன தலைவர் (ம) நிருவாக இயக்குநர் முனைவர் எஸ்.விஜயகுமார், நகராட்சி நிர்வாக இயக்குநர், சு.சிவராசு, கூடுதல் ஆணையர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர்.லலிதா, துணை ஆணையர் (கல்வி), திருமதி ஷரண்யா அறி, மாமன்ற செயலாளர் மகேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

### பெருநகர சென்னை மாநகராட்சி

# மறைந்த மாமன்ற உறுப்பினர்கள் இருவரின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3 இலட்சம் நிதி!

## அமைச்சர் கே.என்.நேரு வழங்கினார்!

சென்னை, டிச. 29-

பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் ஆலப்பாக்கம் கு. சண்முகம் (தி.மு.க. - வார்டு 146 மாமன்ற உறுப்பினர் மற்றும் நிலைக் குழு (பொதுசுகாதாரம்) உறுப்பினர்),

திருமதி க. சரஸ்வதி (தி.மு.க - வார்டு - 59) ஆகியோர் மறைவினையொட்டி அவர்களது குடும்ப பாதுகாப்பு நிதியாக தலா ரூபாய் 3 இலட்சத்திற்கான காசோலையினை அவர்களது குடும்பத்தினரிடம் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு தலைமைச் செயலகத்தில் நேற்று (28.12.2023) வழங்கினார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள உறுப்பினர்கள் மறைவிற்கு குடும்ப நிவாரண நிதியாக ரூபாய் ஒரு இலட்சம் வழங்கி வந்த நிலையில் பெயருநகர சென்னை மாநகராட்சியின் இந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை அறிவிப்பில், பொறுப்பில் உள்ள மாமன்ற உறுப்பினர்கள் மரணமடைந்தால், அவர்களது குடும்பத்திற்கு வழங்கப்படும் நிவாரண நிதி ரூபாய் ஒரு இலட்சத்திலிருந்து 3 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என மேயர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து, மறைந்த ஆலப்பாக்கம் கு. சண்முகம், திருமதி க. சரஸ்வதி ஆகிய இரண்டு மாமன்ற உறுப்பினர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூபாய் 3 இலட்சம் குடும்ப பாதுகாப்பு நிதிக்கான காசோலைகள் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில், மேயர் திருமதி ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையாளர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதிச்சேவை நிறுவன தலைவர் (ம) நிருவாக இயக்குநர் முனைவர் எஸ். விஜயகுமார், நகராட்சி நிருவாக இயக்குநர், சு.சிவராசு, கூடுதல் ஆணையர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர்.லலிதா, துணை ஆணையர் (கல்வி), திருமதி ஷரண்யா அறி, மாமன்ற செயலாளர் மகேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.



தூத்துக்குடி தொகுதி நட்டாத்தியில் மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை கழகத் துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற மக்களவை கழகக் குழு துணைத்தலைவருமான கனிமொழி கருணாநிதி சந்தித்து குறைகளை கேட்டறிந்து நிவாரண உதவிகளை வழங்கினார். அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் உள்பட அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

### முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வருகை!

# தாம்பரம் மாநகரக் கழகத்தினர் திரளாக பங்கேற்பீர்!

## மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. அறிக்கை!

தாம்பரம், டிச. 29-

தாம்பரம் மாநகர கழக செயலாளர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தலைநகர் சென்னையில் போக்குவரத்து நெரிசலைத் தடுக்கும் வகையிலும் வளர்ந்து வரக்கூடிய மாநகரை மனதில் வைத்து தாம்பரம் அடுத்துள்ள கிளாம்பாக்கத்தில் பிரம்மாண்டமான வரலாற்று சிறப்புமிக்க கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையத்தை நமது திராவிட மாடல் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் திருக்கரங்களால் 30.12.2023 காலை 10.30 மணியளவில் திறந்திட வருகை தர உள்ளார்கள் அந்நாளில் தாம்பரத்தை கடந்து செல்லும் நம்முடைய தலைவர் அவர்களுக்கு தாம்பரம் மாநகரில் எனது தலைமையில் மேற்கு தாம்பரம் ரயில் நிலையம் அருகில் சிறப்பான வரவேற்பு அளிக்க உள்ளோம். இந்நிகழ்வில் மாவட்ட மாநகர பகுதி நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் மாவட்ட கழகப் பிரதிநிதிகள் மாவட்ட மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் இளைஞர் அணி மாணவர் அணி மகளிர் அணி மற்றும் கழகத் தோழர்கள் பெருமளவில் கலந்து கொண்டுசிறப்பித்திடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

